# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **சமுதாயத் தொண்டு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சமுதாயத் தொண்டு

## பெரியார் ஈ.வே.ரா

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | இராமசாமி |
| ஊர் | - | ஈரோடு |
| பெற்றோர் | - | வெங்கடப்பர், சின்னத்தாயம்மாள் |
| காலம் | - | 17 - 09 - 1879 முதல் 24 - 12 - 1973 வரை |
| சிறப்பு பெயர்கள் | - | ஈ.வே.ரா. பெரியார், வைக்கம் வீரர் |
| மனைவி | - | நாகம்மை |

**சிறப்புகள்:**

- தமிழகத்தின் மிகப்பெரிய சிந்தனையாளர் - பெரியார் ஆவார்.
- 13 வயதில் திருமணம் செய்து கொண்டு 19 வயதில் இல்லற வாழ்வைத் துறந்தவர் - பெரியார்.
- 1919 ல் காங்கிரசில் இணைந்தார். 1921 ல் காங்கிரசின் நிர்வாகியாகவும், 1923 ல் மாநில காங்கிரசின் தலைவராகவும் இருந்தவர் - பெரியார்.
- யார் எதனைச் சொன்னாலும் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று தற்சிந்தனையுடன் இருந்தவர் - பெரியார்.
- சாதி மத ஏற்றத்தாழ்வுகளை அகற்ற பகுத்தறிவாளர் சங்கத்தை நிறுவியவர் - பெரியார்.
- சூரிய ஒளி பெறாத செடியும் பகுத்தறிவு ஒளி பெறாத சமுதாயமும் வளர்ச்சியடையாது - பாரதிதாசன்.
- கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார். இதற்காக தன் தோப்பிலிருந்த தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தவர் - பெரியார்.
- கதர் அணிய வேண்டும் என்று பரப்புரை செய்தார். அதுமட்டுமின்றி தன் தோளில் கதர் துணிகளை சுமந்து விற்றவர் - பெரியார்.
- பிறப்பால் வரும் கீழ்சாதி, மேல்சாதி என்னும் வேறுபாடுகளை அகற்றி மக்கள் அனைவரும் மனித சாதி என்ற ஓரினமாக வேண்டும் என்றவர் - பெரியார்.
- சிறு குழந்தையையும் வாங்க போங்க என்று மரியாதையுடன் அழைத்து பேசும் நற்பண்பு கொண்டவர் .
- கேரளாவில் வைக்கம் என்ற ஊரில் ஆலய நுழைவு போரட்டம் 1924 ல் நடத்தியதால் வைக்கம் வீரர் என அழைக்கப்பட்டார்.
- சாதி வேற்றுமை, தீண்டாமை கொடுமைகள் அகல எல்லாருக்கும் கல்வி தேவை எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என்று கூறியவர் பெரியார்.

- ❖ காங்கிரசின் நிதியுதவியுடன் சேரன்மாதேவியில் நடைபெற்று வந்த குருகுல பள்ளியை பார்வையிட்ட பெரியார் அத்திட்டத்தை கண்டித்ததோடு தனது பதவியையும் ராஜினாமா செய்தார்.
- ❖ பெரியார் 1925ல் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார்.
- ❖ பெரியார் பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்க்கொண்டு 14 அம்ச சோஷலிச அறிக்கைகளை வெளியிட்டார்.
- ❖ சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் இவருக்கு பெரியார் பட்டம் வழங்கப்பட்டது.
- ❖ ஈ.வே.ரா வுக்கு பெரியார் பட்டம் கொடுத்தவர் - தருமாம்பாள் (அ) தாய்மார்கள்.
- ❖ 1970 ல் ஐ.நா. சபையின் யுனஸ்கோ விருது பெற்றார்.
- ❖ 1978 ல் இவரின் உருவம் கொண்ட அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- ❖ 1925 ல் காங்கிரஸில் இருந்து விலகி 1925 ல் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். இதன் கொள்கைகளை பரப்ப 1925 ல் குடியரசு என்ற தமிழ் இதழையும், 1928 ல் புரட்சி என்ற ஆங்கில இதழையும் துவக்கினார்.
- ❖ மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும். அதுபோல மனிதர்களின் சரிபாதியாக உள்ள பெண்களையும் மதித்தல் வேண்டும் என்று கூறியவர் - பெரியார்.
- ❖ பெண்களுக்கு நகையோ அழகான உடையோ முக்கியம் இல்லை, அறிவும் சுயமரியாதையும் மிக முக்கியம் என்று கூறியவர் - பெரியார்.
- ❖ பெண்கள் மற்போர், குத்துச்சண்டை முதலிய விளையாட்டுகளையும் அரசுப்பணி, இராணுவம், காவல் துறை போன்றவற்றில் சேர்தல் வேண்டும் என்றவர் - பெரியார்.
- ❖ திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியில் நடைபெற்று வந்த பிராமணர்களுக்கான தனி உணவிட முறையை ஒழிக்க பாடுபட்டார்.
- ❖ 1930 ல் தேவதாசி முறை ஒழிப்பு சட்டத்தை கொண்டு வர முத்துலட்சுமி ரெட்டியுடன் சேர்ந்து பாடுபட்டவர் - பெரியார்.
- ❖ “ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு இருக்க வேண்டிய தலையாய பற்று மொழிப்பற்று. இது இல்லாரிடத்து நாட்டுப்பற்றும் இராது. தேசம் என்பது மொழியை அடிப்படையாக கொண்டு இயங்குவது” என்றவர் – பெரியார்.
- ❖ “தொண்டு செய்து பழுத்த பழம், தூய தாடி மார்பில் விழும்” என்று பெரியாரை பாரதிதாசன் போற்றினார்.

- ❖ பெரியாரின் பெண் விடுதலை சிந்தனைகள் இரண்டு. அவை
  1. அடிப்படைத் தேவைகள்
  2. அகற்றப்பட வேண்டியவை

- ❖ அடிப்படைத் தேவைகள் - பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி
- ❖ அகற்றப்பட வேண்டியவை - குழந்தை திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு
- ❖ ஆணுக்கு பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தவர் - பெரியார்
- ❖ தனது 95 அகவையிலும் நற்சிந்தனைகளை எடுத்துக் கூறியவர் - பெரியார்.
- ❖ நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெரும்கேடு, பெண்களை பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை. இவ்வழிநிலை ஒழிக்கப்பட வேண்டும் என்றவர் - பெரியார்.

- அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருப்பது. எனவே புதியனவற்றை ஏற்றல் வேண்டும் - பெரியார்.
- தம் வாழ்நாளில் 8600 நாள், 13,12,000 கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்து 10,700 கூட்டங்களில் 21,400 மணிநேரம் மக்களுக்காக உரையாற்றியவர் - பெரியார்.
- பெண்ணடிமை காரணங்களுள் தலையாய காரணம் சொத்துரிமை இல்லாமையே என கூறியவர் - பெரியார்.
- தமிழகத்தில் இன்று பரவியுள்ள கொடுமைகளில் ஒன்று மணக்கொடை என்று கூறியவர் - பெரியார்.
- பெரியார் குழந்தை திருமணத்தை "சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு" என்றார்.
- 1930 - தேவதாசி ஒழிப்புச் சட்டம்.
- தாமே பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் நம் இளைஞர்களிடையே வளரவேண்டும் என்றவர் - பெரியார்.
- ஒழுக்கமென்பதும், கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்றவர் - பெரியார்.

## முத்து இராமலிங்க தேவர்

| | | |
|---|---|---|
| ஊர் | - | பசும் பொன் இராமநாதபுரம் |
| பெற்றோர் | - | உக்கிரபாண்டிதேவர், இந்திராணி அம்மையார் |
| காலம் | - | 30 - 10 - 1908 முதல் 30 - 10 - 1963 வரை |
| சிறப்பு பெயர்கள் | - | தேசியம் காத்த செம்மல் (திரு.வி.கா கூறியது) வேதாந்தபாஸ்கர், பிரணவ கேசரி, சன்மாாக்க சண்டமாருதம், இந்து புத்தசமய மேதை, தமிழகத்தின் சிங்கம் |

**சிறப்புகள்:**

- நிலக்கிழார் ஒழிப்பு, ஆலய நுழைவு போராட்டம் நடத்தியவர் - முத்து இராமலிங்க தேவர்.
- ஆசிரியர் (வீட்டில்) - குறைவற வாசித்தான் பிள்ளை, அரசியல் வழிகாட்டி வங்காள சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்.
- கமுதியிலுள்ள கிறித்துவப் பாதிரியார்களிடம் தொடக்க கல்வி கற்றவர் - முத்து இராமலிங்க தேவர்.
- பசுமலை உயர்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் கற்றவர்- முத்து இராமலிங்க தேவர்.
- இராமநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 10 வது முடித்தார்.
- இராமநாதபுரத்தில் படித்து கொண்டிருக்கும் போது அங்கு பிளேக் நோய் பரவியதால் இவரது கல்வியும் நின்றது.
- தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் வல்லவர். சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகியவற்றில் சிறந்தவர் - முத்து இராமலிங்க தேவர்.
- ஆங்கில அரசு ஒதுக்கி வைத்திருந்த குற்ற பரம்பரையை விடுதலை அடையச்செய்தவர் - முத்து இராமலிங்க தேவர்.

- 32 ஊர்களில் இருந்த தனது நிலங்களை ஏழைகளுக்கு 17 பாகங்களாக பிரித்து ஒரு பாகத்தை தான் வைத்து கொண்டு 16 பாகத்தை பிரித்தளித்தவர் - முத்து இராமலிங்க தேவர்.
- சமபந்தி முறைக்கு ஊக்கமளித்தவர் - முத்து இராமலிங்க தேவர்.
- நிலக்கிழார் ஒழிப்பிலும், ஆலய நுழைவு போராட்டத்திலும் முன்னின்ற வீரர் - முத்து இராமலிங்க தேவர்.
- “சாதியையும் மதத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை, ஆண்டவன் மனித குலத்தை தான் படைத்தானே தவிர சாதியையும் நிறத்தையும் அல்ல, சாதியும் நிறமும் அரசியலுக்குமில்லை, ஆன்மீகத்திற்கும் இல்லை” என்றவர் - முத்து இராமலிங்க தேவர்.
- விடுதலை போராட்டத்தில் தமிழகத்தின் சிங்கமானார்.
- ஆங்கில அரசு வடஇந்தியாவில் திலகருக்கும், தென்இந்தியாவில் முத்து இராமலிங்க தேவருக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது.
- தாம் ஈடுபடும் விடுதலைப் போராட்டப் பணிகளுக்கு இல்லறவாழ்வு இடையூறாகும் எனக்கருதி திருமண வாழ்வினை தவிர்த்தவர் - முத்து இராமலிங்க தேவர்.
- தொண்டு செய்வதற்கே இவர் தம் தொகுதிக்குச் சென்றுள்ளார் தவிர தேர்தல் விளம்பரத்திற்க்கு அல்ல.
- தெய்வீகம், தேசியம் ஆகிய இரண்டையும் தன் இருகண்களாக கொண்டவர் - முத்து இராமலிங்க தேவர்.
- 1937, 1946, 1952, 1957, 1962 தேர்தல்களில் வெற்றி பெற்றவர் - முத்து இராமலிங்க தேவர்.
- “பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு, வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு” என்றவர் - முத்து இராமலிங்க தேவர்.
- வீரம் இல்லாத வாழ்வும், விவேகம் இல்லாத வீரமும் வீண் என கூறியவர் - முத்துராமலிங்க தேவர்.
- முத்து இராமலிங்க தேவர் விருப்பதிற்கிணங்க 06 - 09 - 1939 ல் சுபாஷ் சந்திர போஸ் மதுரைக்கு வந்தார்.
- விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, சத்தியசீலராக, முருகபக்தராக, ஆன்மீகப் புத்தராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டி சீமையின் முடிசூடா மன்னராக, நீதி வழுவா நேர்மையாளராக, இந்திய தாயின் நன்மகனாக வாழ்ந்தவர் - முத்து இராமலிங்க தேவர்.
- மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிட்டவர் - முத்து இராமலிங்க தேவர்.
- சென்னையில் இவரது உருவச்சிலை நிறுவப்பட்டு அச்சாலைக்கு இவர் பெயர் வைக்கப்பட்டுள்ளது.
- முத்து இராமலிங்க தேவருக்கு 1995 ல் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது (1 ரூபாய்).
- 30.10.1963 ல் தன் பிறந்த நாளிலேயே மறைந்தவர் - முத்துராமலிங்க தேவர்.

## அண்ணல் அம்பேத்கர்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | பீமாராவ் இராம்ஜீ |
| ஊர் | - | அம்பவாடே - கொங்கண் மாவட்டம் மாராட்டிய மாநிலம் |
| பெற்றோர் | - | இராம்ஜி சக்பால், பீமாபாய் |
| காலம் | - | 14 - 04 - 1891 முதல் 06 - 12 - 1956 வரை |

**சிறப்புகள்:**

- "நிகரென்று கொட்டு முரசே - இந்த
  நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
  தகரெண்று கொட்டு முரசே - பாரதியார்
- அம்பேத்கார் படித்த பள்ளி உள்ள இடம் - தபோலி.
- இவர் 14 வது பிள்ளையாக பிறந்தார்.
- ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமின்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் செயல்பட்டவர் பீமாராவின் ஆசிரியர் - அம்பேத்கர்.
- காலத்தினால் செய்த உதவியை ஞாலத்தினும் பெரிதெனக் கருதினார் பீமாராவ். பின்னர் அவ்வாசிரியர் பெயரையே தம் பெயராக மாற்றிக் கொண்டார்.
- அம்பேத்கார் 1908 ல் எல்பின்ஸ்டன் பள்ளியில் தனது உயர்நிலை கல்வியை முடித்தார்.
- பரோடா மன்னர் உதவியுடன் 1912 ல் மும்பையில் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்களை பட்டம் பெற்றார்.
- 1915 ல் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் பெற்றவர் - அம்பேத்கர்.
- 1916 ல் இலண்டனில் பொருளாதாரத்தில் ஆய்வு பட்டம் பெற்றவர் - அம்பேத்கர்.
- மும்பையில் சிறிது காலம் பொருளியல் பேராசிரியராக பணியாற்றியவர் - அம்பேத்கர்.
- மீண்டும் இலண்டனில் அறிவியல் முதுகலை பட்டமும், பாரிஸ்டர்பட்டமும் பெற்றவர் - அம்பேத்கார்.
- இந்தியா திரும்பி வழக்கறிஞர் தொழில் செய்தவர் - அம்பேத்கர்.
- ஒரு நாளில் 18 மணி நேரம் கல்வி கற்க செலவிட்டவர் - அம்பேத்கர்.
- அம்பேத்கார் 20 - 03 - 1927 ல் மராட்டியத்தில் மகாத்து குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை நடத்தியவர் - அம்பேத்கர்.
- இங்கிலாந்து சொல்வதற்கெல்லாம் , இந்தியா தலையசைக்கும் என்பது தவறு என்று கூறியவர் - அம்பேத்கர்.
- 1930 முதல் வட்ட மேசை மாநாட்டில் அம்பேத்கர் "அரைவயிறு கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினராக நான் பேசுகிறேன்" என்றார்.
- அம்பேத்கர் 3 வட்ட மேசை மாநாடுகளிலும் கலந்து கொண்டார்.
- அம்பேத்கர் சட்ட அமைச்சராக பொறுப்பேற்றார்.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் அமைக்க 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.
- ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது.

- “செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம், உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்” என்றவர் - அம்பேத்கர்.
- சாதி எல்லாம் வல்ல ஒருவனால் தோன்றியது அன்று - அம்பேத்கர்.
- சாதி களையப்பட வேண்டிய களை என்றவர் -அம்பேத்கர்.
- அம்பேத்கர் 1946 ல் மக்கள் கல்விக்கழகத்தை தோற்றுவித்தார்.
- 1946 ல் அம்பேத்கர் மும்பையில் சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தை உருவாக்கினார்.
- அம்பேத்கர் எழுதிய பொருளாதார நூல் “இந்தியாவின் தேசிய பங்கு வீதம்”.
- அனைத்து மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும் என்றவர் - அம்பேத்கர்.
- இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் - அம்பேத்கர்.
- ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என்றவர் -அம்பேத்கர்.
- ஜனநாயகத்தின் மறுபெயர் சகோதரத்துவம், சமத்துவத்தின் மறுபெயர் - மனிதநேயம் என்றவர் - அம்பேத்கர்.
- இருப்பெருந் தலைவர்கள் இந்தியாவில் இருந்தார்கள் - ஒருவர் பெரியார், மற்றொருவர் அம்பேத்கர்.
- அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர். பகுத்தறிவு செம்மல், ஆராய்ச்சியின் சிகரம் என்றவர் - பெரியார்.
- இப்பெருந்தலைவர் அம்பேத்கரை போல வேறு யாரையும் நாம் காணமுடியாது என்றவர் - பெரியார்.
- பகுத்தறிவு துறையில் அவருக்கு நிகர் அவரே என்று கூறியவர் - நேரு.
- அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர் மிகவும், ஆர்வத்துடனும் வேகத்துடனும் தன்னந்தனியாக செயல்பட்டவர். தமக்கு கொடுக்கபட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர் என்று கூறியவர் - இராஜேந்திர பிரசாத்.
- அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர், பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சிகளின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி என்றவர் - பெரியார்.
- ஆசிய கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை அம்பேத்கரையே சாரும் என்றவர் - நேரு.
- 1990 ல் அம்பேத்காருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.
- சமுதாயமென்னும் மரத்தின் வேரை சாதிப் புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து - அம்பேத்கர்.
- வடக்கேயிருந்து அம்பேத்கரும், தெற்கேயிருந்து பெரியாரும் இடைவிடாது உழைத்ததனால் சாதி என்னும் பாறை உடைந்து சுக்கு நூறானது.

## காமராசர்

| | | |
|---|---|---|
| ஊர் | - | விருதுநகர் |
| பெற்றோர் | - | குமாரசாமி, சிவகாமி |
| காலம் | - | 15 - 07 - 1903 முதல் 02 - 10 - 1975 வரை |
| சிறப்பு பெயர்கள் | - | கர்மவீரர், ஏழைப்பங்காளர், பெருந்தலைவர், கல்விக் |

கண்திறந்தவர்

**சிறப்புகள்:**

- காமராசர் திண்ணைப் பள்ளியில் தமிழ் கற்றார்.
- காமராசர் மெய்கண்டான் புத்தக சாலைக்கு சென்று லெனின், கரிபால்டி, நெப்போலியன் வாழ்க்கை வரலாறுகளை படித்தார்.
- காங்கிரசு தலைவர் சத்தியமூர்த்தி காமராசரை கட்சியின் செயலாளராக நியமித்தார்.
- காமராசரின் அரசியல் குரு - சத்தியமூர்த்தி.
- 1937 ல் காமராசர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1939 ல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரானார்.
- 1945 ல் பிரகாசம், 1947 ல் ஓமந்தூர் இராமசாமி, 1949 ல் குமாரசாமி முதலியோரை முதலமைச்சராக்கியவர் - காமராசர்.
- காமராசர் தலைவர்களை உருவாக்குபவர் என அழைக்கப்பட்டார்.
- இராஜாஜிக்குப் பின்னர் 1954 - 1963 வரை 9 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்து தாமே பதவி விலகியவர் - காமராசர்.
- காமராசர் முதலமைச்சராக இருந்த போது இவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் - ஆர். வெங்கட்ராமன் (தொழிலமைச்சர்), சி. சுப்பரமணியம் (கல்வியமைச்சர்).
- காமராசர் முதலமைச்சராக இருந்த போது 2 மற்றும் 3 ஆம் ஐந்தாண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.
- காமராசர் முதலமைச்சராக இருந்த போது கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன.
- இவர் காலத்தில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றியது.
- நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை கிண்டி அறுவை சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, பெரம்பூர் தொடர்வண்டி பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை ஆகியவை இவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன.
- காமராசர் காலத்தில் கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது.
- தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர் தோறும் உயர்நிலைபள்ளி என்பதே இவரது நோக்கம் ஆகும்.
- காமராசர் பள்ளி வேலை நாட்களை 180 லிருந்து 200 நாட்களாக உயர்த்தினார்.
- தொடக்கப்பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை நடைமுறைப்படுத்தியவர் - காமராசர்.
- கல்விக் கண் திறந்தவர் என தமிழுலகம் போற்றுபவர் - காமராசர்.
- தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திச் சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு 60 விழுக்காடு பங்கு கிடைக்கச் செய்தவர் - காமராசர்.
- நிலச்சீர்திருத்தம் இவரால் கொண்டு வரப்பட்டு நில உச்சவரம்பு 30 ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது.
- 1962 க்கு பின் காங்கிரசுக் கட்சி சரியத் தொடங்கியது. இதனால் காமராசர் மூத்த தலைவர்கள் பதவி விலகி கட்சிப்பணி ஆற்ற வேண்டும் என்றதால் மொராஜி தேசாய்,

லால்பகதூர் சாஸ்திரி முதலியோர் பதவியிலிருந்து விலகினர். இது “காமராசர்” திட்டம் என அழைக்கப்பட்டது.

- 1963 ல் புவனேஸ்வர் காங்கிரஸ் மாநாட்டில் காமராசர் இந்திய காங்கிரஸ் தலைவர் ஆனார்.
- ஜவர்கலால் நேரு 1964 ல் காலமானார்.
- லால் பகதூர் சாஸ்திரி 1967 ல் தாஸ்கண்டில் உயிர் இழந்தார்.
- லால் பகதூர் சாஸ்திரியின் மறைவிற்கு பிறகு நேருவின் மகள் இந்திரா காந்தி பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் எனக் கருதி அவருக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர் - காமராசர்.
- காமராசருக்கு பாரத ரத்னா (இந்திய மாமணி) விருது அளித்துள்ளது.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவர் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசு கன்னியாகுமரியில் காமராசர் மணிமண்டபம் கட்டியது; சென்னை மெரீனா கடற்கரைச் சாலையில் சிலையமைத்து சிறப்பித்துள்ளது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.
- விருதுநகரிலிருந்த காமராசரின் இல்லமும் அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கப்பட்டது.
- இவரின் பிறந்தநாளான ஜீலை 15 கல்வி வளர்ச்சி நாளாக அரசு அறிவித்துள்ளது.